




ஓலை 192| ஓசை 315| செப்டம்பர் 2026

அகர முதல இலக்கியப் பேரவை



வள்ளலார் (இராமலிங்க அடிகளார்)

கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை



திருக்குறள்

குறள்

பகுத்துண்டு பல்லுயிரி ஓம்புதல் நூலோரி
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

பொருள்

பெற்றதை பிற உயிர்களுடன் பகுத்துண்டு, மற்ற அனைத்து உயிர்களையும் பாதுகாத்து வாழ்தலே, அறநூலார் தொகுத்துச் சொன்ன அத்தனை அறங்களிலும் மிகச்சிறந்த தலையாய அறமாகும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com



நிறுவனர்

செல்வமுத்துகுமரன்
குணசேகரசிவம்

ஆசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

ச.சூர்யா, அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

இனியொரு முறை...

பாவகை : சந்தம் உருவகப்பா

இனியொரு முறைநான் பிறந்திட வேண்டும்!
இனியொரு முறைநான் பற்று கொண்டு
துணிவுடன் சிரித்துப் பிறந்திட வேண்டும்!
அணியாய்த் தமிழை அணிந்திட வேண்டும்!

என்தாய் மடியில் தவழ்ந்திட வேண்டும்!
என்வாய் திறந்து தாலாட்டுப் பாடி
என்தாய் உறங்க உதவிட வேண்டும்!
இன்தமிழ் தாய்க்கே ஊட்டிட வேண்டும்!

அருந்தமிழ் பாலுடன் அன்னைப் பாலை
அமுதப் பாலாய் ஊட்டிட வேண்டும்!
வரும்படி எண்ணி வழித்தடு மாறும்
வையத் தார்க்கே விழியாய் இருப்பேன்!

என்விரல் பற்றி எந்தை நடக்க
எதிர்படும் எவரும் வியந்திட வேண்டும்!
நன்தமிழ் மறந்த ஆசிரியர் எழுதி
நற்றமிழ் கற்றிடச் செய்திட வேண்டும்!

கோவிலில் தமிழைக் கேட்டு மயங்கிட
கடவுளும் தமிழைத் கற்றிடச் செய்வேன்;
மேவிடும் யாவும் தமிழாய் மணக்க
மன்னர் மகனாய்ப் பிறந்திட வேண்டும்!

சட்ட நூலும் வழக்கு மன்றமும்
தமிழில் மிளிர மாற்றிட வேண்டும்!
கட்டுக் கட்டா யுள்ள பணத்தான்
கனித்தமிழ் மட்டும் மணந்திட வேண்டும்!





நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

பாவகை : அறுசீர்விருத்தம் (விளம் + காய் + காய்)

வாழ்வினில் முன்னேற வழிகாட்டும்
வாட்டத்தை நீக்கிடுமே வளத்தைநல்கி.

தாழ்நிலை வந்திட்டால் தளராமல்
தடையினைத் தாண்டிடவே வைத்திடுமே

காழ்ப்பினை அகற்றியுமே கணத்தினிலே
கன்னலாய்ப் பேசிடவே வைத்திடுமே

ஏழ்மையைப் போக்கிடவே எதிர்நிற்க
ஏற்றமும் பெற்றிடலாம் நலமுடனே.



கவிஞர் செ. கலைவாணி

க. பொழுதுகள் ஐந்து கழிந்து மறைய
பதிந்த நினைவுத் தடம்.

உ. வெறுமை அறுத்து வளமை பெருக்கும்
வளவன் உறையும் நிலம்.

ங. எண்ணம் செதுக்கித் தெளிந்து எழுது
எளியோர் செழுமை பெற

ச. முதிர்ச்சி முறிந்து கடுஞ்சொல் உதிர
முறைதிரிந்த சான்றோர் திரள்.

ஞ. முறைபடும் கூடல் மறைந்த முரண்பாடு
முன்னம் தவிர்த்த அகம்.



எண்ணங்கள் தானே விதையாகி முளைக்கும்
ஏற்றத்தின் பாதை தானாக சமைக்கும்
புண்பட்ட நெஞ்சம் வலியினிலே துடிக்கும்
புதைந்திடாத துணிவில் எழுந்திடவே செழிக்கும்
கண்பார்க்கும் எதையும் நம்பிடவும் வேண்டாம்
கண்மூடி அதிலே லயித்திடவும் வேண்டாம்னு
மண்மீதில் கோடி மனக்கருத்தும் உண்டு
மருகாமல் இயல்பில் மலர்ந்திடுதல் நன்று



பிரபஞ்சம் ஈர்க்கும் பெரும்வரமே எண்ணம்
பிழையாகிப் போனால் பெருந்துன்பம் நேரும்
வரவினைப்போல் எண்ணம் நல்விதமாய் வேண்டும்
வலிமையினை ஊட்டும் வளம்நிறைந்த எண்ணம்
தரவுகளும் கூறும் எடுத்துரைத்து எங்கும்
தாங்குகின்ற எண்ணம் தடமமைக்கும் என்றும்
வரிக்கின்ற எண்ணம் ஒளியாக மாறும்
வலிகளுக்கும் நல்ல வழிகளுக்கும் கோரும்

திருமுருகன் திருப்புகழைத் திக்கெட்டும் தெகட்டாத
தீந்தமிழில் தினந்தினமும் எடுத்துச் சொல்லி,
தெய்வீக உணர்வெங்கும் செழித்து வளர்ந்திடத்
தொய்வு சிறிதுமின்றி இறுதிநாள்வரை பாடுபட்டவர்;
தாய்த்தமிழின் பெருமையையும் தரணியெங்கும் பரவச்செய்தவர்;
தேடிய பெருஞ்செல்வம் தனக்கென என வைக்காது
தன்னிகரற்ற அருட்பணிக்கீந்த வள்ளல்மாக்கைப் பெற்றோர்;
தமிழரிவரைப் போற்றாதாரை இந்தத் தீந்தமிழ்க் கவிஞன்யானும்
தலைசாய்த்து வணங்க மாட்டேன் ஒருநாளும்!
தற்பெருமை சிறிதுமற்ற கிருபானந்த வாரியாரை
தமிழன்னை இப்புவிக்குத் தவமியற்றி வரவைத்ததனால்,
திருமலைக்குமரன் யானுமெந்தன் மனமொழி மெய்யாலவர்
வடிவப் பணிந்து யானோதும் தமிழால் போற்றுவனே!

வேலூர் மாவட்ட காங்கேயநல்லூரில்
வேலனை வணங்கித் தமிழ்ப்பணி ஆற்ற,
மல்லையதாசர் கனகவல்லி அம்மையார் இணையருக்கு
மகனாக மண்ணில் நான்காம் மகவாய்ப்
பிறந்தவரே தமிழுலகுப் போற்றுமிப் பெரியார்;
பிறப்பித்த தந்தையையே முதற்குருவாய்க் கொண்டு
கற்பன கற்றுத் தன்பெயருக்கு ஏற்றார்போல்
கருணை மகிழ்ச்சி நிறைந்த பெருங்கடலாய்த் தன்
காலம் புவியில் முடியும்வரை வாழ்ந்தாரே!



பாம்பன் சுவாமிகளைத் தரிசித்த இப்பெரியார்
பரமன் மகனாம் முருகனைப் பூசிக்காது
உணவு உண்ணா பழக்கத்தைக் கைக்கொண்டாரே!
உயிராய் விளங்கும் முருகனுக்கு வயலூரில்
உயரிய இராஜகோபுரம் எழுப்பியும் சேவைசெய்தாரே!
தானிந்த பிறவியிலே குருநாதராய் ஏற்ற
திருப்புகழ் அருளிய அருணகிரிநாதர் திருப்பெயரால்
திக்கற்றோர்க்கு உதவிடவோர் அறக்கட்டளையும் அமைத்தாரே!

உன் குறுஞ் செய்தி தரும் உற்சாகம்
மணிக்கணக்கல்ல, செக்கன்தான்!
என்றாலும், அந்த நொடிப் பொழுதில்
அங்கே நான் கண்ட இன்பம்
நாள் முழுக்க என்னைத் தேற்றி நிற்கும்!



உன் குறுஞ் செய்தி காண
ஏக்கமுடன் காத்திருப்பேன்!
காலை வணக்கம் ஒன்று
வேளைக்குச் சொல்லிவிடு!
வேலையை விட்டு நிற்கமாட்டேன்!
உன் அந்தச் சொல்லில்
என் மனம் ஏங்கி நிற்குது தினம்!

குறுஞ் செய்தியில் உற்சாகம் கொடுத்திடுவாய்
உயிருக்கும் உடலுக்கும்!
பணமோ பொருளோ இல்லை,
மனதை வருடிடும் அந்தக் குறுஞ் செய்தி
எனக்குள் நித்தமும் புத்துணர்ச்சியையும்
புதுவாழ்வைத் தருகிறது!

விவாதங்கள் முடிவுறாமல் நடைபெறும்
அந்தச் சூழலில் மௌனத்தை மேற்கொள்!
இருவரின் நட்பை இணைக்கப் பயன்படும்,
ஒருவரின் பொறுமையால் சண்டைகள் தீரும்.

காதலியின் ஊடலுக்கு விடையாக மௌனம்,
சில சமயம் தனிமையில் மௌனம் சாலச்சிறந்தது.
சின அரக்கனின் பிடியை உடைக்க
மௌனம் பெரும் சுத்தியலாகிறது!



சில சமயம் பதில் கிடைக்காக்
கேள்விகளுக்கும் மௌனம் விடையாகிறது.
விழிகள் சொல்லும் மொழிகளுக்கு நமது
மௌனம் மெல்ல சம்மதமாகிறது.

திருந்தா மனிதரின் தேவையற்ற செயல்களுக்கு
மௌனம் தண்டனை தருகிறது.
தவறைச் சரிபண்ணும் ஆசிரியனாக
மௌனம் புறப்பட்டு மெலிசாய்த் தவழ்கிறது.

தீர்ப்புகளின் ஒட்டுமொத்த உருவமாய்
மௌனம் தேர்வு செய்யப்படுகிறது.
அன்பின் மிகுதியைக் கண்கள் கண்ணீராய் மாற்ற,
மனமோ மௌனத்தில் சிறைப்படுகிறது.

மௌனம் ஒரு யாழ்; மென்மையாய் மீட்டிடுங்கள்!
மௌனம் ஒரு வாள்; தேவையான இடத்தில்
வேலை காட்டும் நாளைத் தேர்வுசெய்யும்.

மௌனத்தை அதிகமாகவும் கையாள வேண்டாம்;
அளவுக்கதிகமாகவும் மௌனமாய் இருக்க வேண்டாம்.
குறிப்பிட்ட நேரங்களில், வினைகளில்
இதைச் சரியாகக் கையாளுங்கள்!

வாழ்வு குன்றிலிட்ட விளக்கென ஒளிரும்;
மௌனம் நேசி, பிரச்சனை தீரும்!
மௌனம் யோசி, வழக்குகள் தீரும்!
மௌனம் பழகுவோம், மனநலம் காப்போம்!

அன்பால் உலகம் இயங்குகிறது;
அரவணைப்பால் உறவுகள் வாழ்கின்றன.

கண்ணீரைத் துடைக்க ஒரு கை நீண்டால்
கடவுள் இறங்கி வந்ததைப்போலாகும்!

பசியோடு இருப்பவனுக்கு ஒருவேளை உணவு
பட்டினியை விரட்டும் மருந்தாகும்.

தனிமையில் தவிக்கும் தாய்க்கு ஒரு வார்த்தை
ஆயிரம் மருந்துகளைவிட வலிமையாகும்.

சாலையில் விழுந்தவனைத் தூக்கிவிடுவோம்;
சக மனிதனை மதித்து வாழ்வோம்.

வேகத்தைவிட விவேகம் பெரிது;
விதிகளை மதித்தால் உயிர் காக்கும்.

நாளைய கனவு நல்லதாக இருக்கட்டும்;
இன்றைய செயல் நேர்மையாக இருக்கட்டும்.

ஏழை பணக்காரன் பாகுபாடு வேண்டாம்;
மனிதம் ஒன்றே உயர்ந்த சாதியாகட்டும்!

மழை வந்தால் மரம் நனையும்;
அன்பு வந்தால் மனம் நனையும்.

நாம் வாழ்வது ஒருமுறை;
நல்லதைச் செய்து வாழ்வோம்.



பாடுகிறேன்

நான் உயரப் பாடவில்லை; நமது
நாடு உயரப் பாடுகின்றேன்.
பணம் பார்க்கப் பாடவில்லை; நல்ல
குணம் சேர்க்கப் பாடுகின்றேன்.

பொன்னை வாங்கப் பாடவில்லை...
சமத்துவ மண்ணைக்
காணப் பாடுகிறேன்.
நல்லதொரு
சலவைக்காரனாக மாறித்
தீமையை வெளுத்து
நன்மை பளிச்சென்று தெரியப்
பாடுகின்றேன்.

பூ விற்பவனாக மாறிப்
பண்பாக அளந்து,
அறிவையும் அன்பையும் அதில் கோர்த்துப்,
பாசமென்னும் நூலில் கட்டிப் பின்
நறுமணம் சேர்த்துத்
தமிழாய்ப் பாடுகிறேன்.

கசாப்புக்காரனாக மாறி
வன்முறையைத்
துண்டு துண்டாக
நறுக்கி...
மனங்களில் சுருக்கென்று
தைக்கும் வண்ணம்
அகிம்சையைப் பற்றிப் பாடுகின்றேன்.



உயர்ந்தவன் என்றும்
தாழ்ந்தவன் என்றும்
பிரிவினை பேசிப்
பிரபஞ்சத்தின் ஈரக்குலையை
அறுப்பவர்களின்
புத்தியை மாற்றப்
புதிய சக்தி வேண்டுமென்று
இறைவனை நோக்கிப் பாடுகின்றேன்.

கவிஞர் முனைவர் அ. ச. மு. முனியாண்டி, திருவில்லிபுத்தூர்

காலம்

காற்றில் மலர்ந்தது காதல்,
காய்ந்து விழுந்தது மோதல்;
கனவில் பிறந்தது உறவு,
காலத்தில் மறைந்தது நினைவு.



நேற்று நம்மோடு நடந்தவர்,
நாளை நம்மை மறந்திடலாம்;
நெஞ்சில் விதைத்த நம்பிக்கை,
நொடியில் நஞ்சாய் மாறிடலாம்.

காலம் காயத்தை ஆற்றுவதில்லை,
காயத்தோடு வாழக் கற்றுத்தரும்;
தோல்வி வாழ்க்கையை முடிப்பதில்லை,
தொலைந்த பாதையைக் காட்டித்தரும்.

சிரித்த முகங்கள் மாறலாம்,
சேர்ந்த கரங்கள் பிரியலாம்;
நேசித்த இதயம் வலிக்கலாம்,
நினைத்த கனவும் கலையலாம்.

எதுவும் என்றும் நிலைப்பதில்லை,
எல்லாமே காலத்தின் பயணம்;
மனிதன் மறைந்தாலும் மறையாது,
அவன் விட்டுச்சென்ற தடம்.

கவிஞர் இ. கேவர்மன், முல்லைத்தீவு (இலங்கை)

யானை சவாரி செய்ய நினைத்த
எறும்பின் ஆசையை
நிறைவேற்றியது வீசிய காற்று!

உயிரை வேர்களிலிருந்து
பூக்களுக்குக் கடத்துகின்றன
தாவரங்கள்.

என்னவளின்
விழிக்குளத்தில் இரண்டும்
கெண்டைகள்!

பூனையின் பார்வையில்
படாத வரை தப்பிக்கலாம்
எலிகள்.



ஊனமுற்றது எங்கள்
உடல்களின் பாகங்களே தவிர,
ஊக்கம் நிறைந்த எங்கள்
உன்னத நெஞ்சமல்ல!
பரிதாபப் பார்வைகளை
எறிந்து உடனே சுட்டெரிப்போம்;
பகட்டுச் சலுகைகளைத் தாண்டி உரிமை முழக்கமிடுவோம்.
சக்கர நாற்காலி என்பது எங்கள் முடக்கமல்ல,
சூகத்தின் தடைகளை உடைக்கும் எங்கள் போர்க்கப்பல்!



ஊன்றுகோல் என்பது வெறும் மரத்துண்டல்ல,
ஊனமுற்ற சிந்தனையின் மார்பில் பாயும் ஈட்டிமுனை!
காகிதத்தில் மட்டும் வாழும் கருணைத் திட்டங்களே,
களத்தில் இறங்கி எங்கள் தேவையைச் சந்தியுங்கள்!

அனுதாபப் பிச்சை போட நீங்கள் யார் எமக்கு?
அங்கீகாரப் போர்க்களத்தில் நாங்களே வென்று காட்டுவோம்.
படிக்கட்டுகளின் உயரத்தில் அல்ல எங்கள் பலவீனம்;
பாகுபாடு காட்டும் உங்கள் குறுகிய மனங்களில்தான்!
மாற்றம் என்பது வெறும் மேடைப் பேச்சல்ல,
மாற்றுத்திறனாளியின் வாழ்வில் மலர வேண்டிய புரட்சி!

விதியை நொந்து முடங்கிப் போகும் காலம் மலையேறியது;
வீதிக்கு வந்து எங்கள் உரிமைக் குரல் ஒலிக்கிறது!
உதவிக் கரங்களை விட சமத்துவக் கரங்களை நீட்டுங்கள்;
இல்லையேல் எங்கள் சுயமரியாதைச் சுவரில் முட்டிக்கொள்ளுங்கள்!

நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் கொண்டு
நிச்சயம் வெல்வோம் இந்த உலகை வலம் வந்து!
மாற்றம் இனி தானாய் வராது எனத் தெரிந்துவிட்டது;
மாற்றுத்திறனாளிகளின் புரட்சிப் பயணம் தொடங்கிவிட்டது!

பொள்ளா பழம்

பளபளவென
’ பொள்ளா பழம்’ ஒன்று கண்டேன்.
கொள்ளாது இருக்க ஏலேன்!
தள்ளாத வயதிலும்
தாளா ஆசைக்கு அடிமை!
மாளா ஆசையின் மயக்கம்!
ஏறா மரம் ஏறி;
யாரும் காணா பாங்காக இறக்கிவிட்டேன்;
’பழத்தை’
நாளை! நாளை!
என்றே;
ஆசையுடன் வைக்க;
’பழத்தின்’ வாசம்
களத்து மேடு வரை!
ஆசையுடன் ’பழம்’
பறித்த எனக்கு,
சுளை உண்ண ஆசையில்லை!
தாளாது, இனி என்றே;
பாழா போகுமின்னு,
பங்கு வைத்தேன்;
’பலா பழத்தை.’
அக்கம் பக்கத்துக்கே!
மலைத் தேனுடன்!



பசுத்தோல் போர்த்திய புலி
என்று மனிதனைச் சொல்கிறோம்;
பாவம் புலி.
அது பசியால் மட்டுமே வேட்டையாடுகிறது;
மனிதனோ பேராசைக்காக வேட்டையாடுகிறான்!

குள்ளநரி என்கிறோம்
சூழ்ச்சி செய்யும் மனிதனை;
பாவம் நரி.
அது உயிர்பிழைக்கவே சூழ்ச்சி செய்கிறது;
மனிதனோ இலாபத்திற்காகச் சூழ்ச்சி செய்கிறான்!

ஓநாய் என்கிறோம்
கொடூரமான மனிதனை;
பாவம் ஓநாய்.
அது உணவுக்காகவே கொல்கிறது;
மனிதனோ அதிகாரத்திற்காகக் கொல்கிறான்!

பாம்பு என்கிறோம்
நஞ்சான மனிதனை;
பாவம் பாம்பு.
அது அச்சுறுத்தப்பட்டால் மட்டுமே கொத்துகிறது;
மனிதனோ காரணமின்றியே நஞ்சைக் கக்குகிறான்!

கழுகு என்கிறோம்
பிறர் பொருளைக் குறிவைக்கும் மனிதனை;
பாவம் கழுகு.
அது கிடைத்த இரையைத்தான் உண்கிறது;
மனிதனோ கிடைக்காததையும் அபகரிக்கிறான்!

நாய் என்கிறோம்
நன்றியற்ற மனிதனை;
பாவம் நாய்.



அது காட்டிய அன்பை மறப்பதில்லை;
மனிதனோ செய்த நன்றியையே மறந்துவிடுகிறான்!

மிருகம் என்கிறோம்
மனிதனின் கொடூரத்தை;
பாவம் மிருகங்கள்.
அவை இயற்கையின் விதிப்படிதான் வாழ்கின்றன;
மனிதனோ மனிதநேயத்தின் விதியையே மீறுகிறான்!

விலங்குகளுக்கு
மனிதக் குணங்களைச் சூட்டிய மனிதனே,
ஒருமுறை கண்ணாடியில் உன்னைப் பார்;
அப்போது புரியும்.

மிருகங்களுக்குக் கொடுத்த
அந்தப் பெயர்களில் பலவும்
உண்மையில் உன்னுடையவை என்று.

பசுமையின் பின்னணி
கொண்ட நீலகிரி
மாவட்டம்

இன்று தோலுரிக்கப்பட்டு
பசுமையின் ஆடைகள்
இன்றி நிர்வாணமாய்

சுற்றுலா பயணிகளின்
சொர்க்கம் வாகனங்களில்
அணிவகுப்பில் நரகமாய்

தேயிலை தோட்டங்கள்
தோண்டப்பட்டு தங்கும்
விடுதிகள் தோரணங்களாய்

காடுகளால் சூழப்பட்ட
மலை மாவட்டம் இன்று
கட்டிடங்களின் இடிபாடுகளாய்

பசுமையின் தரைகள் எல்லாம்
வியாபார விளம்பரத்தில்
விற்கப்படும் வேதனைகளாய்

அமைதியின் அடையாளமான
நீலகிரி இன்று ஆரவாரத்தின்
கூச்சலில் பயங்களாய்



சருகுகள்

தென்றல் தழுவும் நேரம்.
மெதுவாய் மேனி தடவி விடுகிறது
பலத்த காற்றில்
பட்டுச் சிதறி விழுகிறது
எத்தனை பாரங்கள்
விழுந்தாலும் தன்
முதுகுகளைச்
சரிப்படுத்திக் கொள்கிறது...
தன் வாழ்நாளில் எத்தனை உயிர்களைச்
சந்தித்துச் சென்றாலும்...
அத்தனை உயிர்களும்
கொஞ்சமாவது மிதித்து விட்டுச்
செல்கிறது.
பாதங்கள் நிலம் தொடா விட்டாலும்.
இந்தச் சருகுகள்
பாதங்களுக்குப் பாதுகாப்புக்
கொடுக்க மறப்பதில்லை.



அங்குமிங்கும் உதைபட்டு வதைபடும்.
காலங்களோடுதான்.
அன்று நீ நினைத்த
சருகுகள்
பல உன்னை விட
உயர்ந்து பறப்பதைக் கண்டு
ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது.

கவிஞர் சேஹு மொஹம்மது பெளஸுல்ரா

பலாமர பருத்த இலைகள்
பறந்துவந்து படுத்திருக்கும்

பழைமையான புளியமரம்
மழைக்கு ஏங்கிநிற்கும்

எங்கிருந்தோ வந்து ஏகாடிசம்
செய்கிறது சீமைக்கருவேலம்

நீரில் உப்புக்கரித்ததுபோல் நீரை
நிதம் உண்டு கொழுக்கிறது

பனைமரம் மட்டுமே மாற்று
இதன் கொட்டத்தை அடக்கியாள

பனைவேர் மண்ணுக்குள்
பாதை அமைக்கும் நீர்உள்நுழையும்

மண்ணின் ஈரப்பதம் காத்து
பிறதாவர வாழ்விற்கு உதவிடும்

நீர்சுழற்சியில் நீக்கமற நிறையும்
இதுவோர் அற்புதவிருட்சம்

அதிசயம் காண்பித்த இதற்கு
ஞானமுண்டு புரிந்துகொள்க



கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்

மீளாப் பருவமே, மீண்டு வருமோ? தொடர் 03

குட்டைச் சிறுவர்கள்
கூடிக் குடிசை வீடு கட்டி,
மண்சோறு சமையலால்,
செங்கல் தூள் கறித்தூளாய்,
நெறிஞ்சிலைச் சாறு தேங்காயெண்ணெயாய்,
அடுப்படிச் சாமான்கள் அறிந்தொரு காலம்...

நெருப்பட்டிக் குச்சுகளைச்
கள்ளமாய்ச் சேகரித்து,
காக்கைகளைப் போலச்
சுள்ளி சேகரித்து,
விறகு மூட்டி...
உடைந்த தகரங்களையும்,
கூரை ஓடு உடைந்ததையும்
தோசைக்கல், ரொட்டிக்கல்லெனப்
பிரித்தோம்...



சேற்றுக் கலவையைக்
குழைத்தெடுத்துத்
தோசை வார்த்து,
பூவரச இலையைச்
சம்பலெனத் தட்டி எடுத்தோம்...

சிரட்டைத் தணலிலே
எரியுமென அறியாமலே,
மண் நிரப்பி வைத்துவிட்டுச்
சிரட்டையைத் தேடினோம்...

எரிந்தது என அறிந்ததும்
வீழ்ந்து வீழ்ந்து சிரித்தோம்...
"நேரமே போதவில்லை" என
மாலை முடிந்த பின்னும்
புலம்பினோம்...

யார் யாரோ பிள்ளைகள் நாம்...
நம்மில் ஒருவராய்,
ஒன்றெனக் கலந்து,
கலகலத்தொரு காலம்...
மின்னி மின்னி மறையும்
விண்மீனென,
கண்ணிமைக்குள்
வந்து போகும்
நாளதுவே...

திரும்பொரு பொழுதாய்
வராதோ எனச்
சிறுமை வயதில் தோன்றி மறைந்த
அந்த அழகிய பருவம்?
மீளாப் பருவமே...
மீண்டு வருமோ?

அகர முதல இலக்கியப் பரவை
Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

கண்ணுக்குத் தெரியாமல் மண்ணைத் தொட்டு
திசைகளின் வரைபடம் வரையும் தூரிகை
மலர்களின் இதழில் மெல்ல முத்தமிட்டு
மரங்களின் கிளைகளில் தடம் பதித்து
தழுவிச்செல்லும் அமைதிப் பயணம்
மணல் மேடுகளிலும் அலைகளின் அலப்பறையிலும்
காற்று எழுதிச் செல்லும் கவிதை
புயலின் வேகம் கொண்டும் விழுங்கும்
மயக்கும் இசைப்பயணமாய் புல்லாங்குழலில்
உயிரின் மூச்சிலும் தன் முத்திரையைப் பதித்திடும்
இயற்கையெனும் இளையகன்னியின் அரிய கொடையே



இயற்கையே யார் நீ?

புல்வெளியே யார் நீ.
பச்சை பட்டாடை உடுத்தி
உன் விழிகளுக்கு குளிர்ச்சியை தருவது நானே.

ஓங்கி வளர்ந்து நிற்கும் மரமே யார் நீ
அனைத்து ஜீவராசிகளுக்கும்
நிழல் தரும் தாய்வீடு நானே.

வளைந்து நெளிந்து செல்லும் நதியே யார் நீ.
போகும் பாதையில் வழித்தடத்தை ஏற்படுத்து என்ற
வாழ்க்கை சூட்சுமத்தை கற்று கொடுப்பது நானே.

காற்றே யார் நீ
உன் சுவாசம் நானே.

நெருப்பே யார் நீ
உனக்கு ஒளி கொடுப்பது நானே.

வனமே யார் நீ
உனக்கு போர்வை நானே

மழையே யார் நீ
நீ உயிர் வாழ உயிர் துளி
கொடுப்பது நானே.

நிலமே யார் நீ
உன்னை இருக்கும் போதும்
இறந்த பின்னும் சுமப்பது நானே.

இவற்றைத் தன்னுள் கொண்ட
இயற்கையே யார் நீ.



இவற்றை என்னுள் கொண்ட நான்
எனக்காக வாழ்தல் அன்றி
உனக்காக வாழும்
கொடைவள்ளல் நானே.

இயற்கையே யார் நீ என்று
எனை மறந்து வினா தொடுத்த
மடந்தை நான்.

அன்னையும் நீயே
அனைத்தும் படைத்த
ஆண்டவனும் நீயே.
அழகான பேரழகும் நீயே .

கவிஞர் சுமதி தசரதன், திருவான்மியூர் (சென்னை)

என் தாய்மடி எங்கே?

அன்னை மடிதேடி
அலைகின்ற நெஞ்சம்
இன்னல் உலகில்
இதுவொன்றே தஞ்சம்
கால நதியில்
கரைந்தோடும் வயது
ஞாலப் பரப்பில்
உனைத்தேடு தகுது



பச்சை வயல்வெளிப்
பாசத்தின் வாசம்
இச்சை நகர்தனில்
எங்கே அந்நேசம்
தேன்மொழி பேசித்
தாலாட்டிய அமுது
வான்வெளி எங்கும்
நான் தேடும் பொழுது

திண்ணை அமர்ந்து
கதைசொன்ன காலம்
கண்ணின் திரையில்
நிழலாடும் ஞாலம்
வெள்ளி நிலவைக் காட்டி
ஊட்டிய சோறு
புள்ளி மானாய் ஓடிப்
போனதே ஆறு

சேலைத் தலைப்பில்
துடைத்தவென் கண்ணீர்
சாலை ஓரம் தேடும்
கானல்நீர் இந்நீர்
நாடித் துடிப்பினில்
உதிரமாய் நின்றாய்
தேடி அலைகையில்
எங்குநீ சென்றாய்

பூவினும் மெல்லிய
உன்மடி தனைத்தான்
பூமியில் தொலைத்து
ஏங்குதே மனம் இன்று
வயதாகிப் போனாலும்
மகன்தானே நானும்
உயிரோடு அணைக்க
உன்மடியே வேணும்

கவிஞர் கோ. கே. ஏழுமலை, நத்தாமூர் (உளுந்தூர்பேட்டை)

காற்றின் விரல் பிடித்து
கை வீசி நடக்கனும்

துணைக்கு நிழலைத் தவிர
வேறொருவர் தவிர்க்கனும்

தயங்கி நிற்கும் மனதோடு
தடங்கள் மொழியாவும் மீறனும்

முட்டு சந்து பிள்ளையாரே
தோப்புக்கரணம் நான் தரேன்

வேண்டியதை தருவாயா!!





யார் இவன் எனத் தெரியாமலே
எனக்குள் வந்தவன்!
ஊர் பெயர் அறியும் முன்னே
உறவாய் வந்தவன்!

கடக்கும் நொடிதோறும்
கணக்கற்ற கனவுகளை
என்னுள் கட்டிக் கொடுத்தவன்!

தொலைதூரம் நகர்ந்த பின்னும்
நகராமல் அமர்ந்து
எப்போதும் விழித்தே பார்ப்பான்!

வரிசை கட்டி வந்து
குடம் குடமாய் அவன்மேல் நீரூற்றியும்
வலம் வரும் தேவதைகளை
வக்கனையோடு பார்த்து ரசிப்பவன்!

தெத்துப் பல் காட்டி
நான் சிரிக்கும் அழகை
அவன் தொந்தி வயிறு குலுங்காமல்
மௌனமாய் பார்த்துச் சிரிப்பது
ஏன் என்ற கேள்வி என்னுள் எப்போதும் எழும்!

கும்பிட்ட கரங்களுக்குள்
குடியேறிக் கொண்டாலும்
அரச மரத்தடி விட்டு
அகலாது அசையாது
அங்கே வீற்றிருக்கும் அவன் அழகே தனி தான்!

யார் முகம் காண
இப்படி ஒரு தவம் என?
என் அறியா வயதில் அரும்பிய கேள்வி இது!

அவன் தாய் முக வடிவத்தில்
தேவதை வருவாளா என
தேடுகிறான் என்ற பதில்
எனக்குத் தாமதமாய் தெரிந்தபின்பும்
அவனைச் சுற்றி என் தேடுதல் தொடர்கிறது!

கணக்கற்ற கன்னிகள்
அவனைச் சுற்றி
காலம் தோறும் வலம் வந்தும்
ஊரில் முதிர்கண்ணிகள் எண்ணிக்கை மட்டும்
குறையாமல் இருப்பதும்
அவர்கள் அழுது வடிக்கும் கண்ணீர்
ஆறாய் ஓடுவதும்
அவன் அறியாமலா இருப்பான்?
இருந்தும் ஏனோ
அவனுள் இரக்கம் வரவில்லை!

வினை தீர்க்கும் விநாயகா
அவர்கள் வினை தீர்த்திட
இன்றாவது வருவாயா?

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

விடாப்பிடியான சொற்களுக்குள் புதைக்கப்பட்டு
விவாதமில்லா வாழ்க்கையைத் தொடர்ந்து

சப்தமில்லா அறைக்குள்
தன் அவலத்தைச் சிதறவிட்டு



தலையணைக்குள் சிக்கிக் கொண்ட
கண்ணீரை மறைத்துக் கொண்டு

இதழோரம் வருடிவிட்ட புன்னகையொன்றை
மனம் விரும்பாமல் அளித்துக் கொண்டு

உறவுகள் இருந்தும்
உணர்வுகளிலா மனங்களை நேசித்து

எல்லாம் இருந்தும்
எதுவும் இல்லாத இந்த வாழ்க்கையை
என்னவென்று சொல்வது?
அவளும் ஓர் அநாதைதானே..

சின்னச் சின்ன ஆட்டுக்குட்டி
சிரித்துக் கொண்டே மேயுது!
சிறிய குருவி அதன்மேலே
சவாரிதான் பண்ணுது!



புல்லு கொஞ்சம்தான் இருக்கு
புருபுருன்னு தின்னணும்!
எல்லா ஆடும் போயிடுச்சு
எங்கேயுமே காணல!

இந்தக் குருவி போயிட்டுவந்து
இன்னாண்ணு சொல்லணும்!
எந்த வழி போனாங்கண்ணு
எனக்கு மட்டும் காட்டணும்!

நேத்திக்கிப் போன அந்த
நெத்திலி மீன் குட்டையில
பாத்துப் போயி தண்ணியைத்தான்
பாஞ்சு பாஞ்சு குடிக்கணும்!

அங்கதான் இருக்கும் எல்லாம்
அவசரமா ஓடணும் !
எங்க நீ போகப் போற
என் குருவி பதில் சொல்லு!

நிதம் நிதம் அவளின்
அன்புக்கு ஏங்கும் விழிகள்
கண்ணுக்குள் ஏக்கம்
தடமாறும் கால்கள்,
அவளும் பெண்ணே !

பெண்ணென்று சொல்வோம் பெருமிதமாக!
அடிமைத்தனம் உடைத்து,
அச்சம் அதைத் தகர்த்து,
சாதனைச் சிகரம் தொடும் தாரகை அவள் !

மென்மை என்று ஒடுக்கிய காலம் போயிற்று,
இன்று வான்வெளி வரை
அவள் ஆளுமை பரவி நிற்கிறது !

குடும்பத்தின் அச்சாணியாய்,
சமூகத்தின் வழிகாட்டியாய்,
நிமிர்ந்து நடக்கும் புதுமைப்பெண் அவள் !



அவள் மௌனத்தில் ஆயிரம் அர்த்தங்கள்,
அவள் புன்னகையில் கோடான கோடி மகிழ்ச்சி !
தாய்மையின் வடிவில் அவள் கடவுள்,
தோழமையின் வடிவில் அவள் நிழல் !

உலகை இயக்கும் உன்னத சக்தி அவள்,
வீட்டிற்கு வெளிச்சம் தரும் தீபம் அவள்,
அன்பால் உலகை ஆளும்
அழகிய கவிதை அவள் !

அவள் பெண்மைக்குக் கொஞ்சம்
இடைவெளி கொடுத்து,
அவளுக்கு உயிரூட்டம் கொடுங்கள் !
ஏக்கங்களுக்குள் அழகிய சின்னக்
குழந்தை அவள்
அவளும் பெண்ணே!

விழிகளின் ஈர்ப்பில்
வியப்பானேன் கண்ணே
விந்தை புரிந்தே
சிந்தையைக் கவர்ந்திட்டாய்

எழிலான என்னவளே
எண்ணமதில் நிறைந்திட்டாய்
வஞ்சியுனது வனப்பினில்
வசியமானேன் நான்தானே

சகியின் அன்பினில்
சங்கமிக்கிறேன் நித்தமும்
காவியமா ஓவியமா
பூவிதழின் புன்னகை

நளினமான நர்த்தகியே
நாணலாய் வளைகிறாயே
இளந்தென்றல் தழுவிட
மேனியெங்கும் சிலிர்ப்பே



இதழமுதம் பருகிடவே
இதயமும் விளைகிறதே
இனியவளே இளையவளே
இளமையும் மெருகேறுதே

ஓராயிரம் எண்ணங்களில்
ஓய்ந்திடாத உன்னினைவுகளே
முல்லைச் சிரிப்பினில்
முழுவதுமாய் வீழ்ந்திட்டேனே

பனித்துளியாய்க் கரைகிறேன்
பாவையின் காதலிலே
ஐக்கியமானாய் என்னுள்ளே
ஐயமது தீர்ந்ததே

தடாகத்துத் தாமரையாய்
தள்ளாடுகிறேன் காரிகையே
ஆதரித்தே அணைத்திடு
அனைத்துமாய் ஆகிவிடு

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

பிறந்த பிள்ளையின் இதயமாய்
எப்போதும் மகிழ்வின் குதூகலத்தில்
உள்ளமோ சிகரமாய்

ஈகையின் மகோன்னதத்தில்
உயரங்கள் நீண்டிடுமே
இரக்கக் குணத்தால்
இதயமும் கடலாக..

உழைப்பின் உச்சரிப்பை உவமையாய்
உரைத்திடின் கள்ளமில்லா
வெள்ளை மனதோர்
பகிர்ந்திடுவோரே....

நிலங்களை உழவனும் பதப்படுத்தாய்
நெஞ்சங்கள் ஆழமாய்ப் பயனிடப்பட்டே
விளையுமே நேர்மெதிகளுமே..

தொடுவானம் எங்குமில்லை
தொடுதலின் பகுதியிலே
பொங்கும் அலையின் இறுமாப்பின்
சுழற்சியிலோ?

அன்பால்
உயர்ந்த உள்ளமே
வாழ்த்தப்படுமே
இமயத்தின் உச்சங்களில்
வெற்றிக் கொடிகளாக.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

நமக்கான வாழ்க்கை எங்கே.
தேடித் தேடிப் பார்க்கின்றோம்
ஓடி ஓடி உழைக்கின்றோம்..

விருப்பம் இருக்கிறதா தெரியாது.
திருப்பத்தைத் தேடியே திரிகின்றோம்.
ஆசைகளை அடுக்கிக் கொண்டே
காசைத் தேடி அலைகின்றோம்

அடுத்தவருக்காக வாழ்ந்தே நாம்.
படுத்து உறங்க மறக்கின்றோம்
கோரிக்கை வைத்தே கடவுளிடம்
கொடுக்கச் சொல்லி கேட்கின்றோம்.

இருப்பதினிலே மகிழ்ச்சி காணாமல்
பொருளை நிறைப்பதினிலே நிறைகின்றோம்.
தவணை முறையில் வாங்கியே
தலைநிமிர்ந்தே நடக்கின்றோம்

அடகு வைக்கும் நகைகளிலே
முடங்கி கிடக்கிறது மகிழ்ச்சிகளும்.
தேவையற்றதை தேடியே நாம்
தெளிவில்லாமல் வாழ்கின்றோம்.



வட்ட முகத்தினில் பிறையான நுதலினில்
வீற்று இருந்தது பேரழகு-இன்று
பட்டைத் தடிமனில் மாயக் குழம்புகள்
பூசியே தெரிவது தனியழகாம்.

தீட்டாத புருவமும் வில்லாகி வதனத்தில்
ஈட்டியாய்க் காத்த நல்லழகு-இன்று,
வெட்டியாய் மழித்து போலியாய் வரைந்த
புருவமே அழகா சொல்லுங்களே?



கொவ்வை இதழின் பேரழகு பெண்
கொஞ்சு மொழியினில் இருந்ததன்று
செவ்வியதாக தீட்டிய இதழினை இன்று
திறந்ததும் வருவது வன்மொழிகள்.

ஆறடிக் கூந்தலின் அழகு தேவதை
அன்று வாழ்ந்தாள் துன்பம் இல்லை
குட்டை முடியினில் மாய அழகிகள்,
பாலியல் தொல்லையில் திணறுகிறார்.

இல்லறச் சோலையை ஈரமாய்க் காத்திடும்
நீரெனப் பெண்கள் அன்றிருந்தார்.
இல்லறம் எதுவென பகுத்து அறிந்திட,
இயலாத பெண்களால் வம்பு இன்று.

அன்றைய பெண்கள் நிலவு எனின்
இன்றைய பெண்கள் மேற்குரிகள்.
இயற்கையின் அழகினில் காமம் இல்லை.
செயற்கை அழகினில் காதல் இல்லை.

நள்ளிரவு நிலவு

கார்மேகம் சூழ்ந்த இந்த அந்தி வானில்
நடுவே ஒரு மெல்லிய வெளிச்சத்தின் கீற்று
ஊரெங்கும் நிசப்தத்தில் உறங்கிக் கிடக்க
நான் மட்டும் நிலவோடு பேசும் தனிமை



அமைதியாய் அழகாய் நிலா ஒளி வீச
இருண்ட இராப்பொழுதும் அழகாய் மாற
நிலவைக் காணும் அந்த ஒரு நொடியில்
மனதில் ஏதோ புதுப் புன்னகை பூக்கும்

சிந்தனைகள் அகன்று நெஞ்சில்
புது உணர்வு தோன்றும்
அறியா நினைவுகள் அலையாய் மோதும்.
காரிருள் சூழ்ந்த என் நடைபாதையில்
நிலவின் வெளிச்சம் வழிகாட்டிக் கூட்டும்

பகலில் சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கம்
உடலையும் மனதையும் வாட்டிப் பிழிய
இரவினில் மலரும் இந்த நிலவின் ஸ்பரிசம்
உள்ளமும் உடலும் குளிரச் செய்யும்

மௌனத்தின் மொழியில் கவிதை பேசும்
நள்ளிரவு நிலவே எந்தன் தோழியானாய்
இரவின் மடியில் அமைதி தந்து,
என் எண்ணக் கனவுகளுக்கு உயிரும் தந்தாய்

விடியும் வரையில் உன்னோடு பேச
என் மனதும் ஏங்கி நிற்பதேனோ

கவிஞர் ரிஸ்மா ரம்ஸான், அக்குறணை (இலங்கை)

நதியின் ஓட்டம்போல் நகர்கிறது காலம்!
கதைகளாய்ப் பதிகின்றன கடந்த காலங்கள்!
விதைகளாய் மாறும் இன்றைய நிகழ்வுகள்!
சிறுவயதுப் பருவத்தின் சிரிப்பலைகள் நினைவினிலே!
பள்ளிப் பருவத்தின் நினைவுகளோ மனத்திரையில்!

காலத்தைக் கடந்து நிற்கும் நண்பர்களின் நேசம்!
நேசத்தின் நினைவலைகள் நெஞ்சத்தை வருடும்!
மழைத்துளிபோல் கரைந்தோடும் மணித்துளிகள் நாளும்!
பிழைகள் கற்றுத்தந்த பாடங்கள் ஏராளம்!
மரத்தின் வளையங்கள் வயதினைக் காட்டும்!
மனிதனின் அனுபவங்கள் வாழ்வியலைத் தீட்டும்!



அனுபவப் பாடங்கள் வாழ்வில் முதலீடாய்!
தவறிழைத்துத் திருந்தி வாழ்ந்தோரும் உண்டு!
திருந்த விரும்பாமல் தவறிழைப்போர் பலருண்டு!
மூலதனமாய் சேர்ந்திடும் காலத்தின் பாடங்கள்!
பாடங்களின் படிப்பினையால் வெற்றித் தடங்கள்!

கற்ற பாடங்களால் நாளைய மாற்றங்கள்!
திரும்பாது எப்போதும் கரைகின்ற காலம்!
விரயம் செய்யாமல் செயலாற்றல் நன்றாகும்!
பிற்காலத் தலைமுறைகள் பயனடையும் வகையில்
நற்செயல்கள் நறுமணமாய் நிலைத்திருக்கும் வாழ்வில்!

வறியவரோ, பேரரசோ காலத்தின் முன்னே
சிறுசிறு துகள்கள்தாம்! ஒவ்வொரு துகளுக்குள்ளும்
ஒரு கதை ஒளிந்திருக்கும்! இளமையும் முதுமையும்
காலத்தின் பக்கங்களில் வாழ்வியல் கணக்குகளாய்!
வீசுகின்ற காற்றும், கடந்த காலங்களில்
பேசிய கதைகளைச் சுமந்தே செல்கிறது!

இன்றுநாம் பதிக்கும் காலடிச் சுவடுகள்
அடுத்தடுத்த தலைமுறைக்கு வழிகாட்டும் தடங்கள்!
காலத்தின் சுவடுகளாய் கடந்துபோன தடங்கள்!

காதலைச் சொல்ல காத்திருக்கும்
இரு மேகங்கள்
காதலைச் சொன்னதும்,
இடி மின்னலும்
சரணங்கள் வாசிக்க,
பறவைகளும் இசை பாட,
மரங்களோ அதற்கு நடனம் ஆட,
இந்த இசை நடனத்திற்கு பரிசாக
மழைத்துளிகள் மண்ணிற்கு
முத்தமிடுகின்றன.



ஏற்றமும் இறக்கமும்
இல்லாத இடம்
மாற்றம் இல்லாத
பயணத்தின் பாதை

அதே ஆறடிதான்
ஆற்றங்கரையோரம்..
எரிப்பதும் புதைப்பதும்
அவரவர் விருப்பம்

மிஞ்சுவது என்பது
மண்ணுக்கு இரையே



வான்மழை பூமிக்கு
அமுதமாய் பொழிந்திடும்..
பூமியெல்லாம் உயிர்பெற்று
சொர்க்கமாய் மாறிடும்.

இயற்கையின் செயல்கள்தான்
என்னாலும் அதிசயம்தான்.
இயல்பாய் நடந்திடும்
இறைவனின் கொடைதான்.



வாழும் காலம் யாவுமே
மனிதனும் அப்படியே.
கொடையான குணம் கொண்டு
சுற்றத்தை நேசித்தால்
சொர்க்கமாய் மாறிடுமே.

என்னாலும் இன்பம்தான்
"அறமான வாழ்வுதான்"
பூமியிலே புகழோடு
இனிமையான வாழ்வுதனை
எந்நாளும் படைத்திடுவோம்.

வாழும் காலம் வரலாறாய்
வருங்காலத் தலைமுறைக்கு.
பண்பான வாழ்வுதனைப்
பயனோடு அளித்திடுவோம்.

எளிது
அரிதானது
நேரங்களின்
வறட்சியில்
அரிது
எளிதானது
நேரங்களின்
பயிற்சியில்



வருடம் தோறும் வருவது பிறந்தநாள்,
வாழ்வில் ஒரு முறையே வருவது இந்நாள்.
கேக்கின் மெழுகை நான் அணைக்கவில்லை,
கவலைகளையே அன்று அணைத்தேன்.

பரிசுகள் தந்தது பொருளை அல்ல,
பாசத்தின் ஆழத்தைத் தந்தது.
சிரிப்பில் கரைந்தது அந்த இரவு,
சிறகாய் விரிந்தது என் மனது.
காலண்டரில் மட்டும் அல்ல அது,
காலத்தால் அழியாது இதயத்தில் உள்ளது!



தோழியின் பரிசில் தோழமை இருந்தது,
தொலைவிலும் தொடரும் உறவு இருந்தது.
எனக்காக எதையும் செய்யும்
துணிவைக் கண்டேன் இன்று.

பிள்ளைகள் தந்த அன்பில் நான் கரைந்தேன்,
பிஞ்சுக் கைகளில் வானத்தைக் கண்டேன்.
குழந்தைகள் தந்த பரிசு சிறியது,
ஆனால் அதில் வைத்த அன்போ பெரியது.

மகனின் பரிசில் என் உயிர் இருந்தது,
மறக்க முடியாத அன்பின் ஆழம் கண்டேன்,
அதிர்ச்சியில் உறைந்தேன்.

மகளின் பாசம் நான் பெற்ற வரமாக இருந்தது.
சின்னவன் அன்பான பிரார்த்தனை
வாழ்வின் நீண்ட ஆயுளைத் தந்தது போல இருந்தது.
கடையில் வாங்கிய பொருளல்ல இவை,
கடவுள் தந்த உறவுகளின் விலை!

கவிஞர் முஷிதா ஹபீப், கண்டி (இலங்கை)

மண்ணில் உயிர்கள் பல தோன்றிடினும்
மனிதன் என்பவன் மாண்பினைப் பெறுவான்!

கண்ணில் வழியும் கருணை ஒளியில்
கலங்குகின்ற நெஞ்சம் கனிந்துமகிழ்ந்திடும்!

பசி என்று வந்தோர்க்குப் பகுத்துணவளிப்பதே
பாசம் நிறைந்தது பண்பட்ட உள்ளம்!

திசைஎட்டும் பேதங்கள் தீர்த்துவைப்பதுந்தான்
தித்திக்கும் நற்பண்பின் திருவிளக்காகும்!

சாதி மதங்கள் தடைகள் பலவிருப்பினும்
நீதி வழியில் நிலைத்திடும் மாந்தரே!

கோடிப் பொருள்களும் ஈடாகா அன்பிற்கு
கூடி வாழ்வதே மனிதனின் மேன்மை!

இரக்கம் என்னும் ஈகை குணத்தினில்
தரணி முழுதும் தழைத்தோங்கி வாழ்க!

கரங்கள் கோர்த்து நாம் மனிதனைக் காப்போம்
கனிந்த நெஞ்சமே கவிதையின் உயிராகும்!



கவிஞர் கே. மு. அல்தீத், கிண்ணியா

வாசிப்பனுபவம்

கவிதைத் தொகுப்பு



பழைமைக்கும் புதுமைக்கும் பாலமாக நின்று நிலாச்சோறு நமக்குள் எண்ணற்ற சிந்தனை விதைகளைத் தூவிச் செல்கிறது. கிராமத்து பண்பாடுகளையும் நகரத்து நாகரீகச் செறிவுகளையும் ஒருங்கிணைத்த மனம் அதன் சாதக பாதகங்களை கவிதைகளாக மொழிபெயர்க்கிறது. பூமிப் பரப்பை பசுமையாக்கி வெளி எங்கும் விரியச்செய்யும் கிராமத்தின் வட்டார வழக்குச் சொற்களையும் தொலைந்து போன பண்பாட்டு சிதீதிரங்களையும் மீள் உருவாக்கம் செய்து கவிதையில் புதிய மொழியை எழுதிச் செல்கிறது இவரது சிந்தனை மனம்.

வாழ்வின் மீதான தீராத பற்றும் பிற மனிதர்களின் மீதான பேரன்பும் இவருக்குள் அனுபவங்களையும் புதைத்து வைத்திருக்கிறது. அவற்றை மொழியின் வழியே ஆழமாகவும் எளிமையான புன்னகைகளோடு கடந்து போகும் இளமைக் குறும்பின் வனப்பாகவும் கவிதைகளில் சொல்லி விடுகிறார்.

பேய்க் கவிதைகளையும் விட்டு வைக்காமல் பேய்களின் மூலம் இன்றைய நடமாடும் அறிவிலித்தனங்களையும் சாடுகிறது இவரது கவிதைகள். உழவும் அது சார்ந்த தொழிலும் என மக்களுக்கு வயிற்றுக்கு சோறிட்ட வாழ்வில் எத்தனையோ கிராமத்துச் சொற்கள் விளைந்திருக்கின்றன. கமலை, சால்பரி, வடக்கயிறு, வால்கயிறு, தும்பித் தொல், பண்ணைவாய், மேழிவண்டி என கொங்கு வட்டாரச் சொற்களையும் தனது கவிதைகளுக்குள் புகுத்தி நமக்கு அகராதியாகவும் மாறி நிற்கிறது இந்த கவிதைகள்.

ஆதிகாலம் தொட்டு கிராமத்து மக்களிடம் இருந்த சாதியப் படிநிலைகளையும் வாழ்க்கை முறைகளையும் அந்த மனிதர்களோடு வாழ்ந்த நிகழ்வுகளையும் உயிரோட்டமாக கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

கவிஞர் இளையவன் சிவா

வாசிப்பனுபவம்

கவிதைத் தொகுப்பு

நிலாச்சோறு பசித்த குழந்தைக்கு அம்மாவின் அன்பாகவும் பசியறியாக் குழந்தைக்கு தானே உணர்ந்து சோறூட்டும் தாய்மையின் வரமாகவும் நிற்கும் பழுத்த அனுபவத்தின் வெளிப்பாடாக பதிவாகிறது.

நிலாச்சோறு (கவிதைத் தொகுப்பு) ; கே.பி ராமலிங்கம்
முதல் பதிப்பு ஜூன் 2026; பக்கம் 94; விலை ரூபாய் 120
தொடர்புக்கு 94 86 41 09 82



கட்டுரை



தமிழை வீட்டுக்குள் கொண்டு வந்த ஒரு குரலின் நினைவுகள். சில குரல்கள் வெறும் குரல்கள் அல்ல; அவை ஒரு தலைமுறையின் நினைவுகள். நேரில் சந்திக்காதவர்களாக இருந்தாலும், அவர்களின் குரலும் பேச்சும் நம் அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாகிவிடும். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் பேராசிரியர் சாலமன் பாப்பையா.

"அன்புத் தாய்மார்களே... அருமைப் பெரியோர்களே... இனிய குழந்தைகளே..." என்று அவரது குரல் தொலைக்காட்சியில் ஒலிக்கத் தொடங்கியதும், ஒரு குடும்பமே தொலைக்காட்சியின் முன்னால் அமர்ந்துவிடும். அது ஒரு நிகழ்ச்சியின் தொடக்கமாக அல்ல; வீட்டுக்குள் நமக்குத் தெரிந்த ஒருவர் வந்து பேசுவதைப் போன்ற உணர்வைத் தரும்.

2026 செப்டம்பர் 11 அன்று, தனது 90-ஆவது வயதில் மதுரையில் அவர் மறைந்தார். அவரது மறைவு, ஒரு மனிதரின் இழப்பாக மட்டுமல்லாமல், ஒரு தலைமுறையின் நினைவுகளில் ஒலித்த குரலின் இழப்பாகவும் உணரப்படுகிறது.

சாலமன் பாப்பையாவை பட்டிமன்ற நடுவராக மட்டும் நினைவுகூர முடியாது. அவர் பேராசிரியர், எழுத்தாளர், பேச்சாளர், நடிகர், தமிழறிஞர் எனப் பல தளங்களில் இயங்கியவர். மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய அவர், தனது கல்வியையும் இலக்கிய அறிவையும் வகுப்பறைக்குள் மட்டும் நிறுத்தாமல், மக்களிடம் கொண்டு சென்றார்.

சங்க இலக்கியம், திருக்குறள், பழந்தமிழ் இலக்கியம் போன்றவற்றை எளிய மொழியில் மக்களிடம் எடுத்துச் சென்றார். அவரது தமிழ் அறிஞர்களுக்கு மட்டுமல்ல; பாட்டிக்கும், மாணவனுக்கும், தொழிலாளிக்கும், சாதாரண மக்களுக்கும் புரிந்தது. தமிழை எளிமையாக்கினார்.

திரு. தினேஷ் கண்ணா, வழுதாவூர்



கட்டுரை

பட்டிமன்றத்தை வெறும் வாதப் போட்டியாக அல்லாமல், குடும்ப உரையாடலாக மாற்றியதும் அவரது முக்கியப் பங்களிப்பாகும். வாதம், எதிர்வாதம், நகைச்சுவை, பழமொழி, இலக்கியச் சான்று என அனைத்தையும் இணைத்து, கருத்து வேறுபாடுகளையும் ரசிக்கக்கூடிய உரையாடலாக மாற்றினார். பண்டிகை நாட்களில் அவரது பட்டிமன்றங்கள் பல குடும்பங்களின் நினைவுகளோடு இணைந்திருந்தன. அவரது பேச்சில் மதுரையின் மணமும், அந்த மண்ணின் இயல்பான மனிதநேயமும் இருந்தது.

அவருக்கு விருதுகளும் பாராட்டுகளும் கிடைத்தன. ஆனால் மக்கள் மனதில் அவருக்குக் கிடைத்த அங்கீகாரம் அவற்றையெல்லாம் தாண்டியது. ஒரு குரல், ஒரு சிரிப்பு, ஒரு பட்டிமன்ற மேடை, ஒரு பண்டிகை நாள், தொலைக்காட்சியின் முன்னால் ஒன்றாக அமர்ந்த குடும்பம்—இவையே அவரது உண்மையான நினைவுச் சின்னங்கள். "படைப்பாளனுக்கு மறைவேது?" என்ற கி. ராஜநாராயணனின் வரிகள் இங்கே நினைவுக்கு வருகின்றன. ஒரு படைப்பாளியின் உடல் மறையலாம்; ஆனால் அவரது எழுத்தும், பேச்சும், சிந்தனையும், நினைவுகளும் மறைவதில்லை.

இனி ஒரு பட்டிமன்றத்தைப் பார்க்கும்போது மனம் அவரைத் தேடும். ஒரு திருக்குறளை வாசிக்கும்போது, அதை எளிய தமிழில் மக்களிடம் கொண்டு சென்ற பேராசிரியர் நினைவுக்கு வருவார். மதுரைக்குச் செல்லும்போது, அந்த மண்ணிலிருந்து தமிழகம் முழுவதும் ஒலித்த அவரது குரல் நினைவுக்கு வரும். சாலமன் பாப்பையா ஒரு மனிதராக மட்டும் வாழவில்லை; ஒரு தலைமுறையின் நினைவாக வாழ்ந்திருக்கிறார்.

மதுரையின் மைந்தரே, தமிழை வீட்டுக்குள் கொண்டு வந்த பேராசிரியரே, பட்டிமன்றத்தை மக்களின் இல்லங்களுக்குக் கொண்டு சென்ற நடுவரே, எளிய மனிதர்களின் மொழியில் இலக்கியம் பேசிய தமிழறிஞரே, நீங்கள் ஓய்ந்துவிட்டீர்கள். ஆனால் நீங்கள் பேசிய தமிழ் மட்டும் என்றென்றும் ஒலித்துக்கொண்டே இருக்கும். ஒரு குரல் ஓய்ந்தது. ஆனால் அந்தக் குரலுக்கு மறைவேது?

திரு. தினேஷ் கண்ணா, வழுதாவூர்

கட்டுரை

அறிமுகம்



வாழ்க்கை என்பது ஒரு முடிவுறாப் பயணம். அந்தப் பயணத்திற்குப் அர்த்தமும் அழகும் தருவது நாம் நிர்ணயிக்கும் இலக்குகளே. பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனின் ஒவ்வொரு கட்டமும் ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கியே நகர்கிறது. இலக்கு இல்லாத வாழ்க்கை முகவரியில்லாத கடிதத்தைப் போன்றது; அது எந்த இலக்கையும் சென்றடைவதில்லை.

கருப்பையிலிருந்து தொடங்கும் தேடல்

மனிதனின் முதல் பயணம் கருவறைக்குள் தான் தொடங்குகிறது. இருள் நிறைந்த அந்தச் சிறிய உலகத்திற்குள் இருக்கும் குழந்தைக்கு, வெளிச்சத்தை நோக்கி வர வேண்டும் என்பதே முதல் இலக்காக இருக்கிறது.

குழந்தையாக மண்ணில் பிறந்த பிறகு, அதன் வளர்ச்சிப் பருவத்தில் "நாம் எதற்காகப் படிக்கிறோம்? எதற்காக இயங்குகிறோம்?" என்ற தெளிவு ஆரம்பத்தில் இருப்பதில்லை. ஆனால், காலம் உருண்டோடி, அறிவு முதிரும்போது தான் "நம் வாழ்க்கையின் உண்மையான நோக்கம் என்ன? நாம் எந்த இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும்?" என்ற விழிப்புணர்வும் சுய தேடலும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் உதயமாகிறது.

இயற்கை கற்பிக்கும் பாடம்: அலைகளின் விடாமுயற்சி

நம் வாழ்விற்குத் தேவையான மிகப்பெரிய வழிகாட்டி இயற்கை தான். கடலலைகளைக் கூர்ந்து கவனித்தால் ஒரு உண்மை புரியும். அலைகளின் ஒரே இலக்கு கரையைத் தொடுவது தான். அது எத்தனை முறை கரையில் மோதி பின்வாங்கினாலும், தனது முயற்சியை ஒருபோதும் நிறுத்துவதில்லை.

நில்மா ரம்ஸான், அக்குறணை (இலங்கை)



கட்டுரை

ஒவ்வொரு பின்னடைவுக்குப் பிறகும் மீண்டும் இரட்டிப்பு வேகத்தோடு கரையை நோக்கி ஓடிவருகிறது. அலைகள் நமக்குக் கற்பிக்கும் பாடம் இதுதான்: "தோல்விகள் தற்காலிகமானவை; முயற்சிகள் தான் நிரந்தரமானவை."

கஷ்டங்களைக் கடந்து வெற்றியை அடைதல்

அலைகளைப் போலத்தான் நம் வாழ்க்கைப் பயணமும். நாம் நிர்ணயிக்கும் இலக்கை அடையும் வழியில் பல கஷ்டங்களும், தடைகளும், தோல்விகளும் குறுக்கிடத்தான் செய்யும். தோல்வி என்பது ஒரு பயணமுடிவல்ல; அது நாம் கற்றுக் கொள்ளும் பாடம்.

எத்தனை முறை கீழே விழுந்தாலும், மீண்டும் மீண்டும் எழுந்து நிற்கும் விடாமுயற்சிதான் வெற்றி என்னும் ஏணியின் முதல் படியாகும். அந்தப் படியை உறுதியோடு மிதிக்கும் போதுதான், உச்சத்தில் இருக்கும் வெற்றிக் கனியை நம்மால் தொட முடியும்.

முடிவுரை

கருவறையில் தொடங்கிய வெளிச்சத்திற்கான தேடல், நம் வாழ்வின் இறுதி மூச்சு வரை தொடர வேண்டும். தடைகளைக் கண்டு தயங்கி நிற்காமல், அலைகளைப் போல ஓயாது முயற்சி செய்வோம். தெளிவான இலக்கும், தளராத முயற்சியும் இருந்தால், நாம் நினைத்த இலக்கை அடைந்து வாழ்வில் நிச்சயம் வெற்றி பெற முடியும்.

கட்டுரை

முன்னுரை:



தமிழ்நாட்டில் தோன்றிய ஆன்மிகச் சான்றோர்களில், அருட்கருணையின் வடிவமாகத் திகழ்ந்தவர் இராமலிங்க அடிகளார் என்ற வள்ளலார் ஆவார். சமரச சுத்த சன்மார்க்க நெறியை உலகிற்குப் பரப்பி, "ஜீவ காருண்யமே மோட்சத்தின் வழி" என்று வாழ்ந்து காட்டியவர். மனிதநேயத்தின் சிகரமாக விளங்கிய வள்ளலாரின் வாழ்க்கை, தொண்டுகள் மற்றும் அவரது இலக்கியப் படைப்புகள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

பிறப்பும் இளமையும்:

இராமலிங்க அடிகளார் கடலூர் மாவட்டம் மருதூர் கிராமத்தில் ராமையா பிள்ளை - சின்னம்மையார் தம்பதியினருக்கு ஐந்தாவது மகனாக 1823ஆம் ஆண்டு அக்டோபர் 5ஆம் நாள் பிறந்தார். சிறுவயதிலேயே தந்தையை இழந்த இவர், தன் அண்ணன் ராமலிங்கத்துடன் சென்னையில் வசித்தார். முறையான பள்ளிப்படிப்பு பெரிதாகக் கற்றிராவிட்டாலும், இறைவனின் அருளால் பெரும் புலமையும் ஆன்மிக ஞானமும் பெற்றார். சிறுவயதிலேயே முருகப்பெருமானின் மீது பக்தி கொண்டு கவிதைகள் இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தார்.

ஜீவ காருண்யமும் பசிப்பிணி போக்கலும்:

வள்ளலாரின் கொள்கைகளின் மிக முக்கியமானது 'ஜீவ காருண்யம்' (அனைத்து உயிர்களிடத்தும் இரக்கம் காட்டுதல்) ஆகும். உலகத்திலே மிகப்பெரிய பாவம் பசி என்றும், பசியால் வாடும் உயிர்களுக்கு உணவளிப்பதே முதன்மையான இறைப்பணி என்றும் அவர் கருதினார்.

\

கட்டுரை

ஜீவ காருண்யமும் பசிப்பிணி போக்கலும்:

இதன் வெளிப்பாடாக, 1867ஆம் ஆண்டு வடலூரில் "சத்திய தர்ம சாலை"யைத் தொடங்கினார். அங்கு எரிகின்ற அடுப்பு, சாதி, மத, இன பேதமின்றிப் பசியால் வரும் அனைவரின் வயிற்றுப் பசியையும் போக்க आजও தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கிறது. பசித்தோருக்கு உணவு வழங்குவதே உயர்ந்த ஆன்மிகம் என்பதை அவர் உலகிற்கு உணர்த்தினார்.

சமரச சுத்த சன்மார்க்க சங்கம்:

மனிதர்களுக்கு இடையே சாதி, சமயம், வர்க்கம், இனம் போன்ற பிரிவினைகள் இருக்கக்கூடாது என்று அவர் வலியுறுத்தினார். அனைத்து உயிர்களும் ஒன்றே என்ற ஒளியைக் காணச் செய்யும் வகையில் "சமரச சுத்த சன்மார்க்க சங்கம்" மற்றும் "சத்திய ஞான சபை" ஆகியவற்றை வடலூரில் நிறுவினார். சாதி மறுப்புச் சமதர்ம சமுதாயத்தை உருவாக்க அவர் பாடுபட்டார்.

வள்ளலாரின் செய்யுட்களும் நூல்களும்:

தமிழ் இலக்கியத்திற்கு வள்ளலார் வழங்கிய கொடைகள் மிகவும் மதிப்புமிக்கவையாகும். அவர் இயற்றிய ஆன்மிகப் பாடல்கள் மற்றும் உரைநடை நூல்களின் தொகுப்புகள் பின்வருமாறு:



திருவருட்பா: வள்ளலாரின் அனைத்துப் பாடல்களும் தொகுக்கப்பட்ட புகழ்பெற்ற நூல் இதுவாகும். இது மொத்தம் ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

அகவற்பா (அருட்பெருஞ்ஜோதி அகவல்): இறைவனை ஜோதி வடிவில் போற்றிப் பாடிய மிக நீண்ட ஆன்மிக அகவற்பா ஆகும்.

கட்டுரை

வள்ளலாரின் செய்யுட்களும் நூல்களும்:



ஜீவ காருண்ய ஒழுக்கம்: அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்பதையும், பசிப்பிணி போக்க வேண்டியதன் அவசியத்தையும் விளக்கும் உரைநடை நூல்.

மனுமுறை கண்ட வாசகம்: மனிதநேயத்தையும் கருணையையும் வலியுறுத்தி எழுதப்பட்ட மற்றொரு உரைநடைப் படைப்பு.

உபதேசப் பகுதிகள்: வள்ளலார் தன் சீடர்களுக்கும் மக்களுக்கும் வழங்கிய ஆன்மிக அறிவுரைகள் மற்றும் போதனைகளின் தொகுப்பாகும்.

ஜோதி வடிவில் ஐக்கியமாதல்:

வள்ளலார் 1874ஆம் ஆண்டு தை மாதம் 19ஆம் நாள் (தைப்பூச நாளன்று) வடலூரில் தான் அமைத்த சித்தி வளாகத்தில் ஒரு அறைக்குள் சென்று கதவடைத்துக் கொண்டார். பின்னர் அவர் ஜோதி வடிவில் இறைவனுடன் ஐக்கியமானதாக நம்பப்படுகிறது. அதனால் தான் தைப்பூச திருவிழா வடலூரில் மிகவும் பிரம்மாண்டமாகக் கொண்டாடப்படுகிறது.

முடிவுரை:

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று பாடிய பெருந்தகை வள்ளலார். சாதி, மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கவும், ஏழை எளியோரின் பசிப்பிணியைப் போக்கவும் அவர் காட்டிய வழி மனிதகுலம் உள்ளவரை என்றும் நிலைத்து நிற்கும். வள்ளலார் காட்டிய அன்பு மற்றும் இரக்க நெறியைப் பின்பற்றி வாழ்வதே அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்
அகர முதல இலக்கியப் பேரவை



நாளை நமதே

உயிர்களிடம் காட்டும் இரக்கமே
உண்மையான ஈகை;
பசிப்பிணி போக்கும் தொண்டே
மனிதப் பிறவியின் பேறு

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே



முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே தூலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலைலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்புக்கு :

9597887847
8870884969

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com